செய்தி வெளியீடு எண்: 399/2017 நாள்: 10.07.2017

**வேலூர் மாவட்டத்தில் 15.07.2017 சனிக்கிழமை உலக திறன் நாள் முன்னிட்டு பிரத்யேகமான தொழில்திறன் பயிற்சி குறித்த வழிகாட்டுதல் பிரிவு அமைக்கப்பட்டு செயல்படவுள்ளது! வேலை நாடுநர்கள் கலந்துக்கொண்டு பயனடைய மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சி.அ.ராமன், இ.ஆ.ப., அவர்கள் வேண்டுகோள்!!**

வேலூர் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம் தற்பொழுது தொழில்நெறி வழிகாட்டும் மையமாக செயல்பட்டு வருகிறது. இத்தொழில்நெறி வழிகாட்டும் மையம் மூலம் இன்றைய இளைய தலைமுறையினருக்கு உயர்கல்வி, வேலைவாய்ப்பு, போட்டித் தேர்வுகள், சுயவேலைவாய்ப்பு மற்றும் தொழில்திறன் ஆகிய குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்த திறன் வாரம் ஜீலை 10 முதல் 15 வரை கொண்டாடப்படுகிறது.

இதன்படி, 10.07.2017 திங்கட்கிழமை மக்கள் குறைதீர்க்கும் முகாமிற்கு வருகைபுரியும் பொதுமக்கள் மற்றும் இளைஞர்கள் பயன்பெறும் வகையில் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் திறன்வழிகாட்டும் அரங்கு அமைக்கப்பட்டு திறன்பயிற்சி குறித்த பணி மேற்கொள்ளப்படுகிறது. இதே நிகழ்வுகள் அனைத்து தாலுக்கா அலுவலகங்களிலும் நடத்திட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. 11.07.2017 செவ்வாய்கிழமை அன்று பள்ளி மற்றும் கல்லூரிகளில் பயிலும் மாணவர்களுக்கு திறன் பயிற்சி குறித்த விழிப்புணர்வு நடத்தப்பட உள்ளது. 12.07.2017 புதன்கிழமை பெண்களும் திறன்பயிற்சியை பெறும் வகையில் பள்ளி மற்றும் கல்லூரி மாணவிகளுக்கு திறன்பயிற்சி குறித்த நிகழ்ச்சி நடத்தப்பட உள்ளது. 13.07.2017 வியாழக்கிழமை அன்று வேலூர் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தில் திறன் பயிற்சி பெற்ற மாணவர்களுக்கு தனியார் துறைகளில் வேலைவாய்ப்பு பெற்றுத்தர தனியார்துறை வேலைவாய்ப்பு முகாம் நடத்தப்பட உள்ளது. 14.07.2017 வெள்ளிக்கிழமை அன்று மாற்றுத் திறனாளிகளுக்கும் திறன்பயிற்சியை பெற்று வாழ்க்கையில் முன்னேறும் வகையில் மாற்றுத் திறனாளிகளுக்கான சிறப்பு விழிப்புணர்வு நடத்தப்பட உள்ளது. 15.07.2017 சனிக்கிழமை உலக திறன் நாள் (World Skilled Day) வேலூர் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தில் கொண்டாடப்பட உள்ளது.

மேலும், இவ்வார முழுவதும் திறன்பயிற்சி குறித்த விழிப்புணர்வை அளிக்கும் வகையில் வேலூர் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தில் இதற்கென பிரத்யோகமான ஒரு தொழில்திறன் பயிற்சி குறித்த வழிகாட்டுதல் பிரிவு அமைக்கப்பட்டு செயல்பட உள்ளது. இவ்வாய்ப்பினை வேலைநாடும் இளைஞர்கள் பயன்படுத்தி திறன் பயிற்சியில் சேர விரும்புவோர் மின்னஞ்சல் **www.tnskill.tn.gov.in**-ல் பதிவு செய்து கொள்ளுமாறு, **வேலூர் மாவட்ட ஆட்சித் தலைவர்** திரு.சி.அ.ராமன்,இ.ஆ.ப. அவர்கள் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளார்.

மாவட்ட ஆட்சித் தலைவர்
வேலூர் -09

செ.ம.தொ.அ. 10/7/17
வேலூர் - 9.